(6 pages) **Reg. No. :** ...............................

**Code No. : 22015** **Sub. Code : B 1 TL 21**

U.G. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2012.

Second Semester

Part I — Tamil

Paper II — செய்யுள், இலக்கணம், உரைநடை, இலக்கிய வரலாறு, வாழ்க்கை வரலாறு

(For those who joined in July 2010 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

சரியான விடையைத் தேர்வு செய்க.

1. திருவாசகம் என்னும் நூலின் ஆசிரியர்

(அ) அப்பர் (ஆ) சுந்தரர்

(இ) மாணிக்கவாசகர் (ஈ) திருமூலர்

2. மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே என இறைவனை விவரிப்பவர்

(அ) வள்ளலார் (ஆ) மாணிக்கவாசகர்

(இ) திருநாவுக்கரசர் (ஈ) திருவள்ளுவர்

3. சாலவும் நன்று

(அ) பெயர்ச்சொல் (ஆ) வினைச்சொல்

(இ) இடைச்சொல் (ஈ) உரிச்சொல்

4. வேற்றுமை உருபை ஏற்றுவரும் சொற்கள்

(அ) பெயர்ச் சொற்கள் (ஆ) வடசொல்

(இ) திரிசொல் (ஈ) மொழிக்குறியீடு

5. பண்டையக்காலத் தமிழின் இலக்கணத்தை விளக்கும் நூல்

(அ) நன்னூல் (ஆ) தொன்னூல் விளக்கம்

(இ) சங்கம் (ஈ) தொல்காப்பியம்

6. தமிழ்ப்பிராமி காலப்போக்கில் எத்தகைய எழுத்தாக உருமாறியது

(அ) கல்லெழுத்து (ஆ) வட்டெழுத்து

(இ) பேச்சொலி (ஈ) இசைக்குறி

7. ஒரே நேரத்தில் நூறு நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் நினைவாற்றலைப் பெற்றவர்

(அ) அட்டாவதானி (ஆ) சதாவதானி

(இ) சோடசவதானி (ஈ) சப்தாவதானி

8. நவசக்தி என்னும் இதழை நடத்தியவர்

(அ) மறைமலை (ஆ) தனிநாயகம்

(இ) திரு. வி.க. (ஈ) மு.வ.

9. திருக்குறளை எழுதியவர்

(அ) ஔவையார் (ஆ) பாரதியார்

(இ) திருவள்ளுவர் (ஈ) தொல்காப்பியர்

10. சீறாப்புராணத்தை எழுதியவர்

(அ) உமறுப்புலவர் (ஆ) சேக்கிழார்

(இ) சதாவதானி (ஈ) பேயாழ்வார்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை எழுதுக.

11. (அ) சுந்தரர் இறைவனையே பாடுமாறு கூறும் தேவாரப் பாடல் கருத்தினைத் தருக.

(அல்லது)

(ஆ) முதுமொழிக் காஞ்சி தரும் எளிய பத்து எவையெவை? விளக்குக.



12. (அ) ஏகார, ஓகார இடைச் சொற்களைச் சான்றுடன் தருக.

(அல்லது)

(ஆ) செய்வினை, செயப்பாட்டு வினை பற்றி எடுத்துரைக்க.

13. (அ) மொழி என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) அண்டை நாடுகளில் உருவாக்கப்படும் தமிழ்ச் சொற்களை அனைவரும் பயன்படுத்த முடியாத நிலைமை பற்றி எழுதுக.

14. (அ) திரு.வி.க. பெண்கள் முன்னேற்றத்திற்கு ஆற்றிய தொண்டு பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) திரு.வி.க.வின் நூல்களின் தனிச் சிறப்புக் குறிப்பு விவரிக்க.

15. (அ) முதலாழ்வார்கள் பற்றியெழுதுக.

(அல்லது)

(ஆ) ஏலாதி – விளக்குக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களில் விடை தருக.

16. (அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறக் கருத்துக்கள் பற்றிப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகரின் திருவாசகச் சிறப்பினை எடுத்தியம்புக.

17. (அ) நீங்கள் வசிக்கும் பகுதியில் நூலக வசதி வேண்டி மாவட்ட நூலக அதிகாரி அவர்கட்குக் கடிதம் ஒன்று வரைக.

(அல்லது)

(ஆ) ஒரு பொருளுக்குரிய விளம்பரம் எவ்வாறு அமையலாம் என்பது குறித்து விவரிக்க.

18. (அ) உலகச் செம்மொழிகள் பற்றிக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பரிதிமாற்கலைஞர் அவர்களின் பார்வையில் செம்மொழிச் சிந்தனை – விளக்குக.



19. (அ) திரு.வி.க.வின் சமய நல்லிணக்கம் குறித்துக் கட்டுரை ஆசிரியர் பெ. சுயம்பு கூறுவதை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திரு.வி.க.வின் இதழ்ப்பணி – விளக்குக.

20. (அ) பன்னிரு திருமுறைகளைப் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழில் கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சி பற்றி விவரிக்க.